**INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM**
**SUMMATIVE ASSESSMENT I - SEPTEMBER - 2014**

**SUBJECT - TAMIL**
**CLASS – IX**

INTERNATIONAL INDIAN SCHOOL DAMMAM LIBRARY

Time: 3 Hours — Maximum Marks: 90
நேரம்: 3 மணி — மொத்த மதிப்பெண்கள்: 90

**The question paper is divided into four sections:**
**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| SECTION: A | | Reading comprehension | - | 15 Marks |
| பிரிவு: | அ | படித்தல் (உரைநடைப்பகுதி) | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: B | | Writing | - | 20 Marks |
| பிரிவு: | ஆ | எழுதுதல் | - | 20 மதிப்பெண்கள் |
| SECTION: C | | Grammar | - | 15 Marks |
| பிரிவு: | இ | இலக்கணம் | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: D | | Literature/Text Books | - | 40 Marks |
| பிரிவு: | ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல் | - | 40 மதிப்பெண்கள் |

<u>குறிப்பு :</u>
- கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
- விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
- வினாக்களின் எண்களை உரிய இடத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

## பிரிவு - அ

**1. கீழ்வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

புவி நாள் என்பது ஆண்டுதோறும் ஏப்ரல் 22ம் நாளன்று புவியின் சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அச்சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக்கோடு அனைத்து நாடுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஒரு சிறப்பு நாளாகும். 1969ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் யுனெஸ்கோ மாநாடு ஒன்று நிகழ்ந்தது. அக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுள் ஒருவர் ஜான் மெக்கானெல். அவர் உலக அமைதிக்காகக் குரல்கொடுத்த ஒரு மாமனிதர். மனிதரும் பிற உயிரினங்களும் வாழ்கின்ற பூமியின் அழகைச் சிறப்பிக்கவும், பூமியின் இயற்கைச் சூழலைக் குலைத்து மாசுபடுத்தாமல் காக்கவும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தேவை என்று அவர் வலியுறுத்தினார். அதோடு, ஆண்டுதோறும் புவி நாள் என்றொரு நாளைக் கொண்டாடுவது பொருத்தம் என்றும் மெக்கானெல் கருத்துத் தெரிவித்தார்.

அதே சமயத்தில், ஐக்கிய அமெரிக்காவில் சுற்றுச்சூழலியல் நிபுணரும் மேலவை உறுப்பினருமான கேலார்ட் நெல்சன் என்பவர் சுற்றுச்சூழல் பற்றிய அறிவைப் பரப்பத் தகுந்த நாளாக 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் நாள் நடத்த அழைப்பு விடுத்தார். இந்த நாளின்போது புவியின் வடகோளப் பகுதி

**வசந்த காலமாகவும், தென்கோளப் பகுதி இலையுதிர் காலமாகவும் காணப்படுகிறது. அவரது அழைப்பை ஏற்று 20 மில்லியன் மக்கள் இந்நிகழ்வில் பங்கெடுத்தார்கள். அன்றிலிருந்து ஆண்டு தோறும் இந்நாள் 175 நாடுகளில் புவி நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் சூன் 5ம் நாளன்று உலக சுற்றுச் சூழல் நாளை அனுசரித்து வருகிறது.**

1. உலக அமைதிக்காக குரல் கொடுத்த மாமனிதர்

    அ) விவேகானந்தர்
    ஆ) ஜான் மெக்கலோ
    இ) ஆப்ரகாம்
    ஈ) ஜான் மெக்கானல்

2. 1970, ஏப்ரல் 22 - ம் நாளன்று புவி நாளாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் நாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

    அ) 200
    ஆ) 175
    இ) 150
    ஈ) 125

3. ஐக்கிய நாடுகளால் கொண்டாடப்படும் உலகச் சுற்றுச்சூழல் நாள் யாது?

    அ) மே 5-ம் நாள்
    ஆ) ஏப்ரல் 5-ம் நாள்
    இ) ஜீலை 5-ம் நாள்
    ஈ) ஜூன் 5-ம் நாள்

4. புவியின் வடகோளப்பகுதி வசந்தகாலமாகவும், தென் கோளப்பகுதி இலையுதிர்காலமாகவும் காணப்படும் நாள்

    அ) ஏப்ரல் 22
    ஆ) ஏப்ரல் 20
    இ) ஜூன் 22
    ஈ) ஜூன் 20

5. 1969-ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற மாநாடு யாது?

    அ) யுனிசெஃப்
    ஆ) யுனெஸ்கோ
    இ) ஸார்க்
    ஈ) வட்ட மேசை

**2. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

**உப்பு சத்தியாகிரகம் அல்லது தண்டி யாத்திரை என்பது காலனிய இந்தியாவில் ஆங்கிலேயர் இந்தியர்கள் மீது விதித்த உப்பு வரியை அறவழியில் எதிர்க்கும் திட்டமிட்ட போராட்டமாகும். காந்தியடிகள் 1882 இல் ஆங்கிலேயர் விதித்த உப்புச் சட்டத்தை சத்யாக்கிரகத்தின் முதல் இலக்காகத் தேர்ந்தெடுத்தார். 1930 ஜனவரி 30 ஆம் நாள் இந்திய தேசிய காங்கிரசு அறிவித்த முழு விடுதலை என்ற விடுதலைப் பிரகடனத்திற்குப் பிறகு ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து அமைப்பு ரீதியாக**

தடையைமீறி உப்பெடுக்கும் நடைப்பயணமாகத் துவங்கியது. காந்தியடிகள் தனது சபர்மதி ஆசிரமத்திலிருந்து 23 நாள்கள் 240 மைல் தூரத்திலுள்ள தண்டிக்கு நடை பயணத்தை வழி நடத்தினார், உப்பை உற்பத்தி செய்வதற்கு விதித்த தடையை மீறி வழியில் அவருடன் இந்தியர்கள் பெருமளவு எண்ணிக்கையுடன் இணைந்தனர்.

ஏப்ரல் 6, 1930 இல் காந்தியடிகள் தண்டியில் உப்புச் சட்டங்களை உடைத்தபோது, அது பேரளவில் சட்ட மறுப்பு இயக்கமாக இலட்சக்கணக்கான இந்தியர்களை ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் போராடத் தூண்டியது. உப்புச் சத்தியாகிரகப் பிராச்சாரம் காந்தியின் கோட்பாடான வன்முறையற்ற அறப்போர் என்ற அறநெறியை அடிப்படையாகக் கொண்டது, அதை அவர் "உண்மைச்சக்தி" என வரையறுத்தார்.

1. காந்தியடிகள் முதல் இலக்காகத் தேர்ந்தெடுத்த சத்தியாக்கிரகம் எது?

அ) வெள்ளையனே வெளியேறு
ஆ) உப்புச்சட்டம்
இ) வன்முறைப்போர்
ஈ) ஆப்பிரிக்கப் போராட்டம்

2. உப்புச்சத்தியாக்கிரகம் எங்கு நடைபெற்றது?

அ) டெல்லி
ஆ) ஆக்ரா
இ) குஜராத்
ஈ) பீகார்

3. காந்தியடிகள் எத்தனை நாட்கள் தண்டிக்கு நடைப்பயணம் மேற்க்கொண்டார்?

அ) 23 நாட்கள்
ஆ) 25 நாட்கள்
இ) 27 நாட்கள்
ஈ) 29 நாட்கள்

4. உப்புச்சத்தியாக்கிரகப் போராட்டம் எதனை அடிப்படையாகக் கொண்டது?

அ) வன்முறைப்போர்
ஆ) உண்ணாவிரதம்
இ) நடைப்பயணம்
ஈ) வன்முறையற்ற அறப்போர்

5. காந்தியடிகள் 'உண்மைச்சக்தி' என்று எதனை வறையறுத்தார்?

அ) தீண்டாமை
ஆ) உப்புச்சத்தியாக்கிரகம்
இ) வன்முறைப்போர்
ஈ) கதரியக்கக்கொள்கை

3. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)

கற்றாழை பூக்கும் தாவர இனத்தைச் சேர்ந்த ஓர் பேரினமாகும். தமிழில் இத்தாவரம் கற்றாழை, கத்தாளை, குமரி, கன்னி. என அழைக்கப்படுகிறது. இது வறட்சியான சூழ்நிலையில் கடல் மட்டத்திலிருந்து 1000 அடி உயரம் வரை உள்ள மலைப்பிரதேசங்களில் வளர்கின்றது. நுனியில் பெரும்பாலும் சிறு முட்களுடன் காணப்படும் மடல், வேர் ஆகியவை மருத்துவப் பயனுள்ளவை. அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பில் கற்றாழை பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது. கற்றாழை லில்லியேசி தாவர குடும்பத்தைச் சேர்ந்தது. இது ஆப்பிரிக்காவை தாயாகமாகக் கொண்டது. மேலும் கிரேக்கம், பார்படோ தீவுகள், சீனா, இத்தாலி, வெனிசுலா, தென்னாப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகிய நாடுகளில் இயற்கையாக வளர்கின்றது. இது பொதுவாக, தென்னாப்பிரிக்காவின் கேப் மாநிலத்திலும், ஆப்பிரிக்காவின் வெப்பமண்டல பகுதியின் மலைகளிலும், ஆப்பிரிக்காவின் தீவுகள், அராபியத் தீபகற்பம், மடகாஸ்கர் போன்ற அண்டைப் பகுதிகளிலும் காணப்படுகிறது. இந்தியாவில் ராஜஸ்தான், ஆந்திரா, குஜராத், தமிழ்நாடு ஆகிய இடங்களில் சாகுபடி செய்யப்படுகின்றது.

கற்றாழையின் மருந்து மகத்துவத்தை கி.பி. 17 ஆம் நூற்றாண்டிலேயே ஆப்பரிக்கர்கள் கண்டறிந்து உலகத்துக்கு அறியப்படுத்தினர். கற்றாழையின் இலையில் ‘அலோயின்’, ’அலோசோன்’ போன்ற வேதிப்பொருட்கள் உள்ளன. சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் கற்றாழைச்சாறு, இருமல், சளி, குடல்புண் ஆகியவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகின்றது. கடும் வயிற்றுப்புண், தோலில் ஏற்படும் தீக்காயம், அரிப்பு, வெட்டுக்காயங்கள் ஆகியவற்றிற்கும் மருந்தாகப் பயன்படுகின்றது.

1. கற்றாழை எந்தப்பகுதிகளில் அதிகமாக வளர்கின்றது?

அ) ஏரி
ஆ) குளம்
இ) ஆழ்கடல்
ஈ) மலைப்பிரதேசம்

2. கற்றாழை எந்தவகை தாவரக்குடும்பத்தைச் சார்ந்தவை?

அ) ரோசாசைனென்ஸிஸ்
ஆ) லில்லியேசி
இ) ஹைபிஸ்கஸ்
ஈ) மைமூசா

3. கற்றாழையின் தாயகம் எது?

அ) ஜப்பான்
ஆ) ஆசியா
இ) ஆப்பிரிக்கா
ஈ) ஆஸ்திரேலியா

4. 'அலோசோன்' - என்பது யாது?

அ) அலோபதி மருந்து
ஆ) கற்றாழை இலையின் வேதிப்பொருள்
இ) சித்தா மருந்து
ஈ) மருத்துவ முறை

5. பல வகையான மருத்துவக் குணங்கள் நிறைந்த கற்றாழையின் மறுபெயர் யாது?

அ) கன்னி
ஆ) கண்ணி
இ) தூதுவளை
ஈ) அகத்தி

## பகுதி - ஆ

**4.** பத்தாம்வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் சகோதர / சகோதரிக்கு ஓர் பாராட்டுக்கடிதம் எழுதுக. **(8)**

**அல்லது**

நீ வாழும் பகுதியில் ஓர் ' பூங்கா' அமைக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஓர் கடிதம் எழுதுக.

**(உமது முகவரி: ராஜா / ராணி, கதவு எண் - 15 / 7, காந்திஜி சாலை, அண்ணா நகர், அரச்சலூர்- 638 099 எனக் கொள்க.)**

**5. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக. (8)**

அ) முன்னுரை - சுத்தம் சுகாதாரம் - சுற்றுப்புறத்தூய்மை - நோயற்ற வாழ்வு - வளமான சமுதாயம் - முடிவுரை

**அல்லது**

ஆ) முன்னுரை - மரங்களை வளர்ப்போம் - மழையைப் பெருக்குவோம் - செழிப்பான நாட்டை உருவாக்குவோம் - முடிவுரை

**அல்லது**

இ) முன்னுரை - இணைய தளம் - அதன் அவசியம் - நன்மைகளும் தீமைகளும் - நல்லவற்றிற்கே உபயோகப்படுத்துதல் - முடிவுரை

**6.** உனது பள்ளியில் நடைபெற்ற ‘முதலுதவி முகாம்’ குறித்து ஓர் அறிக்கை எழுதுக. **(4)**

**அல்லது**

உமது பகுதியில் நடைபெற்ற ‘புத்தகக் கண்காட்சி’ குறித்து ஓர் அறிக்கை எழுதுக.

## பகுதி - இ

**7) சான்று தருக. (எவையேனும் மூன்று மட்டும்)** **(3)**

1. இன்னிசை அளபெடை

அ) குடிதழீஇ
ஆ) அரங்கம்
இ) உழாஅர்
ஈ) உடுப்பதூஉம்

2. ஒலிப்பு முனைகள்

அ) மார்பு
ஆ) அண்ணம்
இ) கழுத்து
ஈ) தலை

3. கருத்தாவாகு பெயர்

அ) சமையல் கற்றேன்
ஆ) காளை வருகிறான்
இ) கம்பர் படிக்கிறேன்
ஈ) மூன்று மீட்டர் தா

4. எதிர்மறை இடைநிலை

அ) காணான்
ஆ) கண்டான்
இ) காண்பான்
ஈ) காண்கிறான்

5. மரபு வழு

அ) கண்ணகி வந்தான்
ஆ) நாங்கள் வந்தார்கள்
இ) நாய் கத்தும்
ஈ) நாய் குரைக்கும்

**8) நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்)** **(3)**

1. நாவினது நுனி, அண்ணத்தினது நுனியைத் தொடுவதால் தோன்றும் எழுத்துக்கள் ______________

அ) க், ங்
ஆ) ச், ஞ்
இ) ட், ண்

2. இடம் பொருளுக்கு ஆகி வருவது ______________

அ) தானியாகு பெயர்
ஆ) இடவாகு பெயர்
இ) காரியவாகு பெயர்
ஈ) கருவியாகு பெயர்

3. ஓர் வினைமுற்று, வினையைக்குறிக்காமல், வினை செய்தவரைக் குறிப்பது ________

அ) தொழிற்பெயர்
ஆ) வினைப்பெயர்
இ) வினையாலணையும் பெயர்
ஈ) பெயர்ச்சொல்

4. 'தோற்றரவு' - இதில் உள்ள தொழிற்பெயர் விகுதி ______________

அ) தோற்று
ஆ) அரவு
இ) தோன்று
ஈ) உ

5. 'கரிகாலன் நாளை வந்தான்' - இத்தொடர் ______________

ஆ) வழுவமைதி
ஆ) வினா வழு
இ) விடை வழு
ஈ) காலவழு

**9. கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்று மட்டும்)** **(3)**

1. நாளை படித்தேன் (வழாநிலையாக மாற்றுக)

அ) நாளை படிக்கிறேன்
ஆ) நாளை படிப்பேன்
இ) நேற்று படிப்பேன்
ஈ) நாளை படித்துக்கொண்டிருக்கிறேன்

2. உண்டனன் ( இதில் உள்ள 'சாரியை' யை எழுதுக)

அ) ட்
ஆ) அன்
இ) உண்
ஈ) அனன்

3. 'மன்' (பகாப்பதம் எழுதுக)

அ) பெயர்ப்பகாப்பதம்
ஆ) வினைப்பகாப்பதம்
இ) இடைப்பகாப்பதம்
ஈ) உரிப்பகாப்பதம்

4. 'சுடு' (முதனிலைத்திரிந்த தொழிற்பெயராக மாற்றுக)

அ) சுடு
ஆ) சுடுதல்
இ) சூடு
ஈ) கெடு

5. தயிரை இறக்கு ( இத்தொடரில் உள்ள ஆகுபெயரை எழுதுக)

அ) கருவியாகு பெயர்
ஆ) சொல்லாகு பெயர்
இ) இடவாகு பெயர்
ஈ) தானியாகு பெயர்

**10. இலக்கணக்குறிப்பு தருக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)**

1. 'என் மாமா வந்தது'

அ) பால் வழு
ஆ) கால வழு
இ) திணை வழு
ஈ) விடை வழு

2. ஆதிரையான்

அ) பொருட்பெயர்ப்பகுபதம்
ஆ) இடப்பெயர்ப்பகுபதம்
இ) சினைப்பெயர்ப்பகுபதம்
ஈ) காலப்பெயர்ப்பகுபதம்

3. 'தன்னின்'

அ) படர்க்கைப் பன்மைப் பெயர்
ஆ) படர்க்கை ஒருமைப் பெயர்
இ) தன்மை ஒருமைப்பெயர்
ஈ) தன்மைப் பன்மைப் பெயர்

4. இரண்டே பெறுக; இனிதே வாழ்க.

அ) எண்ணல் அளவை ஆகுபெயர்
ஆ) எடுத்தல் அளவை ஆகுபெயர்
இ) முகத்தல் அளவை ஆகுபெயர்
ஈ) நீட்டல் அளவை ஆகுபெயர்

5. வெஃஃகுவார்க்கில்லை

அ) சொல்லிசை அளபெடை
ஆ) செய்யுளிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை
ஈ) ஒற்றளபெடை

**11. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (எவையேனும் மூன்று மட்டும்) (3)**

1. அ) செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது செய்யுளிசை அளபெடை ஆகும்.
ஆ) செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.
இ) செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.
ஈ) செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.

2. அ) தானி தானத்திற்கு ஆகி வருவது கருவியாகு பெயர் ஆகும்.
ஆ) தானி தானத்திற்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் ஆகும்.
இ) தானி தானத்திற்கு ஆகி வருவது இடவாகு பெயர் ஆகும்.
ஈ) தானி தானத்திற்கு ஆகி வருவது தானியாகு பெயர் ஆகும்.

3. அ) நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நும், உம் எனத்திரியும்.
ஆ) நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நின். உன் எனத்திரியும்.
இ) நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நும்மை, உம்மை எனத்திரியும்.
ஈ) நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நுங்கள், உங்கள் எனத்திரியும்.

4. அ) பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள் பகுதி, சந்தி.
ஆ) பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள் இடைநிலை, சாரியை.
இ) பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள் பகுதி, விகுதி.
ஈ) பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள் சந்தி, சாரியை.

5. அ) இலக்கண முறையில்லாவிடினும் இலக்கணமுடையதாக ஏற்றுக்கொள்வது வழுநிலை.
ஆ) இலக்கண முறையில்லாவிடினும் இலக்கணமுடையதாக ஏற்றுக்கொள்வது வழா நிலை.
இ) இலக்கண முறையில்லாவிடினும் இலக்கணமுடையதாக ஏற்றுக்கொள்வது வழுவமைதி.
ஈ) இலக்கண முறையில்லாவிடினும் இலக்கணமுடையதாக ஏற்றுக்கொள்வது மரபு வழு.

## பகுதி - ஈ

12. கீழ்வரும் பத்தியைப்படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)

அன்றைய தமிழகத்தில் பலவகையான கப்பல்கள் கட்டப்பட்டன. கலம்செய் கம்மியர் என ஒருவகைத் தொழிலாளர் தமிழகத்தில் இருந்தனர். அவர்களால் பெருங்கப்பலகள் அக்காலத்தில் கட்டப்பட்டன. ஒவ்வொரு பெரிய கப்பலும் மதில் சூழ்ந்த ஒரு மாளிகைபோலத் தோன்றும். ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி என்பவை கடலைக்குறிக்கும் தமிழ்ச்சொற்கள். இவ்வாறே மரக்கலத்துக்கும் தமிழ்மொழியில் பல பெயர்கள் வழங்குகின்றன. அவை, கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் என்பன.

ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான கலத்தைக்குறிக்கும். உப்பங்கழிகளில் செலுத்துதற்குரிய சிறிய படகுகளும் கடலில் செலுத்துதற்குரிய பெரிய நாவாய்களும் அன்றிருந்தன. கடலில் செல்லும் பெரிய கப்பல் நாவாய் எனப்படும். பெரிய நாவாய்கள் காற்றின் துணைகொண்டே இயங்கின. அவை பாய்மரக்கப்பல்கள் எனப்பட்டன. இதற்குக் காற்று எவ்வெப்போது எவ்வெத்திசை நோக்கி வீசும் என்று உணர்வது அடிப்படையாகும். இதனைத்தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர்.

1. 'கலம் செய் கம்மியர்' - யார்?

அ) மாளிகை கட்டுபவர்
ஆ) கப்பல் செய்பவர்
இ) கட்டடம் கட்டுபவர்
ஈ) வணிகம் செய்பவர்

2. கடலைக்குறிக்கும் சொற்களில் இதுவும் ஒன்று.

அ) புனை
ஆ) பஃறி
இ) திமில்
ஈ) வாரணம்

3. கடலில் செலுத்தப்படும் பெரிய கப்பலின் பெயர் யாது?

அ) பரிசில்
ஆ) அம்பி
இ) நாவாய்
ஈ) வங்கம்

4. பெரிய கப்பல்கள் எவ்வாறு இயங்கின?

அ) இயந்திரத்தால்
ஆ) துடுப்பின் உதவியால்
இ) காற்றின் உதவியால்
ஈ) நீரின் உதவியால்

5. சிறிய படகுகள் எங்கு செலுத்தப்படுகின்றன?

அ) உப்பங்கழிகளில்
ஆ) கடலில்
இ) ஏரிகளில்
ஈ) ஆறுகளில்

**13. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதுக. (5)**

**சிங்கப்பூர், மலோசியா, பினாங்குத் தீவு ஆகிய நாடுகளில் கோவில்கள் கட்டி ஆண்டுதோறும் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். பரப்பளவில் சிறியதான ரியூனியன் தீவில் வாழ்பவர்களுள் பெரும்பான்மை மக்கள் தமிழரே. அவர்கள் பிரெஞ்சுக்காரர்களால் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலிருந்து ஒப்பந்தக்கூலிகளாக அங்குக் குடியமர்த்தப்பட்டார்கள். பிரான்சு நாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படும் அத்தீவில் வாழும் தமிழர்கள் பிரெஞ்சுமொழியே பேசுகிறார்கள். அவர்கள், தமிழைப் பேசாதபோதும் தமிழர்தம் பண்பாட்டுக் கூறுகளை மறவாது இன்றளவும் பின்பற்றி வருகிறார்கள்.**

**இலங்கையில் வாழும் தமிழர்களில் தொண்ணூற்றைந்து விழுக்காட்டினர் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழிலேயே கல்வி பயில்கின்றனர். பல நாடுகளில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. அமெரிக்க நாட்டுப் பேராசிரியர்கள் வி.எஸ். இராஜன், கௌசல்யா ஹார்ட், இந்திரா, நார்மன், ஹால் சிப்மேன், மறைந்த பேராசிரியர் ஏ.கே. ராமானுஜம் போன்றவர்கள் தமிழுக்கு அரும்பணிகள் ஆற்றியுள்ளனர். இருபத்து நான்கு மணிநேரமும் வானொலி, தொலைக்காட்சி, இணையதளம் போன்ற ஊடகங்களில் தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்கவும், காணவும் ஆங்காங்கே வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டு அரசுகளிடம் அனுமதி பெற்றுள்ளார்கள். இந்த ஊடகங்கள் தமிழர்களை இணைக்கும் பாலங்களாகத் திகழ்வதோடு மொழியை மறவாமல் காக்கவும் மேம்படச் செய்யவும் பேருதவி புரிகின்றன.**

1. பெரும்பான்மை தமிழர்கள் வாழும் சிறிய தீவு

அ) அந்தமான் தீவு
ஆ) ரியூனியன் தீவு
இ) நிக்கோபார் தீவு
ஈ) பிஜித்தீவு

2. தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும் நாடுகளில் ஒன்று

அ) மொரிசியசு
ஆ) கர்நாடகா
இ) கேரளா
ஈ) டெல்லி

3. 'ஹால் சிப்மேன்' - என்பவர் யார்?

அ) அமெரிக்க வாழ் தமிழர்
ஆ) அறிவியல் அறிஞர்
இ) மறைந்த பேராசிரியர்
ஈ) தமிழுக்கு அரும்பணி ஆற்றியவர்

[redacted]

4. தமிழர்களை இணைக்கும் பாலங்களாகத் திகழ்வது எது?

அ) ஊடகங்கள்
ஆ) போக்குவரத்து
இ) அயல்நாடு
ஈ) வேலைவாய்ப்பு

5. தமிழிலேயே கல்வி கற்கும் இலங்கை வாழ் தமிழர்களின் சதவிகிதம் எவ்வளவு?

அ) தொண்ணூறு
ஆ) தொண்ணூற்றாறு
இ) தொண்ணூற்றைந்து
ஈ) தொண்ணூற்றேழு

**14. கீழ்க்காணும் செய்யுள் வரிகளைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. (4)**

**'பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு**
**பெண்களெல்லாம் அரம்பையர்போ லொளிரு நாடு**
**வீரமொடு மெய்ஞ்ஞானந் தவங்கள் கல்வி**
**வேள்வியெனு மிவையெல்லாம் விளங்கு நாடு**
**சோரமுதற் புன்மையெதுந் தோன்றா நாடு**
**தொல்லுலகின் முடிமணிபோல் தோன்று நாடு**
**பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்**
**பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே!'**

1. 'அரம்பையர்' - பொருள் யாது?

அ) பாடகி
ஆ) நடனமகளிர்
இ) மகளிர்கள்
ஈ) தேவமகளிர்

2. 'சோரம்' - இதன் பொருள் யாது?

அ) நெறியோடு கூடிய சொல்
ஆ) நெறிமுறை தவறிய சொல்
இ) வீரம்
ஈ) மெய்யறிவு

3. 'பாவியேன் துணை புரியும் பான்மையென்னே?' - கூறியவர் யார்?

அ) துரியோதனன்
ஆ) பாண்டவர்கள்
இ) விதுரன்

4. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) கண்ணதாசன்
ஆ) திரு.வி.க.
இ) பாரதிதாசன்
ஈ) பாரதியார்

**15. விடையளிக்க (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** **(10)**

1. திராவிட மொழிக்குடும்பம் பற்றி எழுதுக.

2. சமுதாய மேம்பாட்டிற்கு பாரதியாரின் பங்களிப்பு யாது?

3. தமிழகத்தின் பழங்காலத் துறைமுகங்கள் பற்றியும் அங்கு நடைபெற்ற வணிகம் பற்றியும் விளக்குக.

4. புலம் பெயர்ந்த தமிழர் தாயகத்துடன் கொண்டுள்ள தொடர்பு எத்தகையது?

5. அக்காலத்தில் பூம்புகார் எவ்வாறு விளங்கியது?

**16. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **(8)**

1. பிறர் செய்த தீங்கினை எங்கனம் பொறுத்துக்கொள்ள வேண்டும்?

2. சிறுபஞ்ச மூலம் பெயர்க்காரணம் மற்றும் வனப்புகளாகக் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

3. செல்வத்துப்பயனே ஈதல் - என்பதனைப் புறநானூற்றின் வழி நின்று விளக்குக.

4. பாலை நிலத்தின் வெம்மையைக் கலிங்கத்துப்பரணி எவ்வாறு வருணித்துள்ளது?

**17. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** **(8)**

1. ரஷீத் தமக்குக் கிடைத்த மாங்கன்றை எவ்வாறு வளர்த்தார்?

2. கெலன் கெல்லர் எவ்வாறு கல்வி கற்றார்?

3. கண்ணதாசனின் வாழ்வியல் சிந்தனையை விளக்குக.

>>>>>>>>>>>><<<<<<<<<<<<